மரக்கன்றுகள் நடுவோம்! மரம் வளர்ப்போம்! மழைபெறுவோம்!!!

# மோட்டார் வாகன புகை பரிசோதனை மையங்களின் சங்கம்

# MOTOR VEHICLE EMISSION TESTING CENTRE ASSOCIATION

(பதிவு எண் : 3/2014)

767, கற்பகம் நகர், 4வது மெயின்ரோடு, வடக்கு RTO ஆபிஸ் எதிரில், K.புதூர், மதுரை - 625 007.

| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| **R.ராமகிருஷ்ணன்** | **S.ராஜசேகர்** | **S.நந்தகோபால்** |
| 93633 36450 | 98422 77232 | 98947 95275 |


தேதி: 13.12.2017

பெறுநர்:

**உயர்திரு. போக்குவரத்து ஆணையர் அவர்கள்,**
போக்குவரத்துதுறை, ஆணையரகம்,
சேப்பாக்கம், சென்னை-600005.

ஐயா,

பொருள்: புகைச்சான்றிதழ் கட்டணத்தை உயர்த்தி அரசு ஆணையை வெளியிட செய்தல், புகைச் சான்றிதழில் ஹாலோகிராம் ஸ்டிக்கர் ஒட்ட நடைமுறைப்படுத்துதல், வாகன இன்சுரன்ஸ் புதுப்பித்தல் வேளைக்கு புகைச் சான்றுதழ் கட்டாயமாக்குதல் சம்மந்தமாக.

நாங்கள் பல தடவைகளில் போக்குவரத்து ஆணையர் அவர்களை சந்தித்து வாகன புகை சான்றிதழ் கட்டணம் உயர்த்தி வழங்க கோரிக்கை வைத்திருந்தோம். கடந்த 2013-ஆம் ஆண்டு கட்டணத்தை உயர்த்தி போக்குவரத்துஆணையர் அவர்களின் செய்ல்முறை ஆணைகள் பிறப்பிக்கப்பட்டது. தற்போது வரை தமிழக அரசு உள்துறை அரசு ஆணைக்காக காத்திருக்கிறது என்பதை தங்களின் கவனத்திற்கு கொண்டுவருகிறோம்.

மத்திய அரசாங்கம் மற்றும் உச்சநீதிமன்றத்தின் ஆணைப்படி வாகனங்களுக்கு காப்பீடு சான்றிதழ் புதுப்பிக்கும்பொழுது வாகன புகைச் சான்றிதழ் கட்டாயமாக்கப்பட்டுள்ளது என்பதை தங்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறோம்.

கன்றுகள் நடுவோம்! மரம் வளர்ப்போம்!! மழைபெறுவோம்!!

# மோட்டார் வாகன புகை பரிசோதனை மையங்களின் சங்கம்

# MOTOR VEHICLE EMISSION TESTING CENTRE ASSOCIATION

(பதிவு எண் : 3/2014)

767. கற்பகம் நகர். 4வது மெயின்ரோடு. வடக்கு RTO ஆபிஸ் எதிரில். K.புதூர். மதுரை - 625 007.

| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| **R.ராமகிருஷ்ணன்** | **S.ராஜசேகர்** | **S.நந்தகோபால்** |
| 93633 36450 | 98422 77232 | 98947 95275 |


தேதி :

மற்ற மாநிலங்களில் வாகன புகைச் சான்றிதழ் போலிகளை தடுக்க ஒவ்வொரு சான்றிதழ்களிலும் ஹாலோகிராம் ஸ்டிக்கர், போக்குவரத்துதுறை சார்பாக தனியார் வானபுகை சோதனை மையங்களுக்கு வழங்கபடுகின்றது. தமிழகத்தில் இருந்து வெளிமாநிலங்களுக்கு செல்லும் வாகனங்களுக்கு தரப்படும் வாகனபுகை சான்றிதழில் ஹாலோகிராம் ஸ்டிக்கர் இல்லாத காரணத்தினால் மீண்டும் புகை சான்றிதழ் பெற கட்டாயப்படுத்தப்படுகின்றது என்பதை தங்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறோம்.

எனவே, மரியாதைக்குரிய போக்கு வரத்து ஆணையர் அவர்கள்

1) வாகனபுகை பரிசோதனை கட்டண உயர்வு அரசு ஆணையை வெளியிட ஆவண செய்யுமாறும்
2) வாகனத்திற்கு இன்சூரன்ஸ் புதுப்பித்தலின் போது வாகன புகை சான்றிதழை கட்டாயப்படுத்த ஆணை பிறப்பிக்குமாறும்
3) வாகனபுகை பரிசோதனை சான்றிதழில் தமிழ்நாடு போக்குவரத்துதுறை ஹாலோகிராம் ஸ்டிக்கர் வழங்க ஆவண செய்யுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

இப்படிக்கு
தங்கள் உண்மையுள்ள